## 2018 ஆம் ஆண்டிற்கு
## சகோ. அலோயுஸ் அவர்கள் வழங்கும் நான்கு வழிமுறைகள்

# தீராத மகிழ்ச்சி

கடந்த ஆண்டு மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்ட ஒரு இளம்பெண் என்னை சந்தித்த போது என்னிடம் சொன்னாள்:"நான் வாழ்க்கையை விரும்புகிறேன்." அவளது நம்பிக்கை என் நெஞ்சைத் தொட்டது. அவளது வார்த்தைகள் மட்டுமல்ல, அவளது முகத்தில் வெளிப்பட்ட அளவற்ற மகிழ்ச்சி; நிறைவும் என்னை தொட்டது.

மேலும் குழந்தைகளின் மட்டற்ற மகிழ்ச்சியைப் பற்றி என்ன சொல்வது? சமீபத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள அகதிகள் முகாமில் மிகவும் இன்னலுக்குரிய நிலையில் வாழும் குழந்தைகளின் உற்சாகமான வாழ்க்கை என்னை சிந்திக்க வைத்தது. உண்மையில் உயிருடன் வாழ்வதில் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறார்கள்.

சகோதரர் ரோஜர் அவர்களால் நமது தேசே குழுமத்தின் இதயத்தில் பதித்து சென்றுள்ள வழிமுறைகளின் அடிப்படையிலும் 2018ஆம் ஆண்டு முழுவதும் மூன்று முத்தான எதார்த்த வழிமுறைகளில் ஒன்றான மகிழ்ச்சியை எளிமை மற்றும் இரக்கத்துடன் சிந்தித்து போதிப்பதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

சமீபத்தில் நான் நமது சகோதரர்களில் ஒருவரோடு தென் சூடானின் ஜூபா, ரூம்பெக் மற்றும் தலைநகரமான கார்ட்டும் சென்ற பொழுது துன்பத்தில் பரிதவிக்கும் மக்களின் நிலையை கண்டு உணர்ந்து அவர்களுக்காக மன்றாடினேன். அங்கே பல்வேறு ஆலயங்களுக்கு சென்று அங்குள்ள நிலையை கண்டறிந்தேன். பல திருச்சபைகளையும் அவற்றின் செயல்பாடுகளையும் ஏழை, எளிய ஆதரவற்ற மக்களுக்கு அவர்கள் ஆற்றி வரும் பணிகள் சேவைகளைப் பற்றியும் நேரில் கண்டறிந்தேன். முக்கியமாக பெண்களின் நிலைமையும், தாய்மார்கள் மனம் தளராமல் நம்பிக்கையுடன் வாழ்வதை பார்க்கும் பொழுது எனக்கு பெரிதும் வியப்பாக இருந்தது.

அங்குள்ள இக்கட்டான சூழ்நிலையில் பலர் தங்களது வீடுகளை விட்டு வேகமாக வெளியேறினாலும் வாழ்க்கையை வாழத்துடிக்கின்றனர். அவர்களின் தைரியம், துணிவு, நம்பிக்கை அசாதாரமானது. அந்த சந்திப்பு சூடான் நாட்டின் இளம் அகதிகளுடன் நம்மை நெருங்கி கொண்டு போகச் செய்துள்ளது.

இதற்கு முன் நான் இரண்டு சகோதரர்களோடு எகிப்து நாட்டில் உள்ள 1999ல் உருவாக்கப்பட்ட "அனபோரா சமூகத்தின்" இளைஞர்கள் பங்கேற்ற 5 நாள் கூட்டத்திற்கு சென்றிருந்தேன். அங்கே நாங்கள் அவர்களுடன் சேர்ந்து செபிப்பதிலும் அவர்களின் கலாச்சாரம் நல்ல பழக்க வழக்கங்களையும் பகிர்ந்து கொண்டோம். குறிப்பாக எகிப்திய திருச்சபை பற்றியும் இளைஞர்களின் மனநிலையையும் அறிந்து கொண்டோம். நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஐரோப்பா, வடஅமெரிக்கா, எத்தியோப்பியா, லெபனான், அல்ஜீரியா மற்றும் ஈராக் நாடுகளிலிருந்து வந்திருந்தனர். அவர்களை நூற்றுக்கும் மேற்பட்ட கெய்ரோ, அலெக்சாண்டிரியா, மேல் எகிப்து பகுதிகளை சார்ந்த இளைஞர்கள் வரவேற்றனர்.

அங்கே காப்டிக் திருச்சபையில் மரித்த வேதசாட்சிகளின் வாழ்க்கையைப் பற்றி விவாதித்தோம். நானும் நமது சகோதரர்களும் அங்கே அச்சபையின் தலைவர் திருத்தந்தை டவடோரஸ்II, அவர்களால் இன்முகத்துடன் வரவேற்கப்பட்டோம்.

ஆப்பிரிக்காவிலிருந்து நாங்கள் திரும்பும் பொழுது எங்கள் மனதில் எழுந்தது இதுதான்! அவர்களின் அழுக்குரலை ஊடகம் வழியாக அறிந்து கொண்டால் மட்டும் போதாது! அவர்கள் நம்மைவிட்டு வெகுதூரத்தில் இருக்கிறார்களா? அல்லது அருகில் இருக்கிறார்களா? அவர்களின் கூக்குரலுக்கு நமது வாழ்வின் மூலம் எப்படி செவிசாய்க்க முடியும்.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் வழிமுறைகள் இந்த கேள்விகளுக்கு ஒரு வழிமுறையாக அமையும்.

# முதல் வழிமுறை

## மகிழ்ச்சி எனும் ஊற்றுக் கிணற்றை ஆழமாய் தோண்டுதல்

நம் ஆண்டவர் கூறுகிறார் . . .“ உனக்கு முடிவில்லாத அன்பு காட்டியுள்ளேன்; எனவே பேரன்பால் உன்னை ஈர்த்துள்ளேன்” (எரேமியா 31:3)

“ உனக்கு கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்; அவர் மாவீரர்; மீட்பு அளிப்பவர்; உன் பொருட்டு அவர் மகிழ்ந்து களி கூருவார்; தம் அன்பினால் உனக்குப் புத்துயிர் அளிப்பார்; உன்னைக் குறித்து மகிழ்ந்து ஆடிப்பாடுவார் ” (செப்பனியா 3:17)

“ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள்; மீண்டும் கூறுகிறேன் மகிழுங்கள்” (பிலிப்பியர் 4:4)

தேசே ஆலயத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை வேளையில் அனைவரும் ஒன்று கூடி ஒவ்வொருவருமே கையில் மெழுகுதிரி ஏந்தி ஒருவர் மற்றொருவர் கைகோர்த்து விழாக்கோலம் காண்பது எதற்காக ? உயிர்த்த இயேசு கிறிஸ்துவின் மீட்பின் நம்பிக்கையை உறுதிபடுத்துவதற்காகத் தான் என்பதை உணர்த்துவதற்கும் உயிர்த்தஇயேசுதான்நம்மிடையேமகிழ்ச்சியைஉருவாக்குகின்றார்என்பதற்காகத்தான் இந்த வழிபாடு நடத்தப்படுகிறது.

மகிழ்ச்சிஎன்பதுஒருதனிப்பட்டஉணர்வுஅல்ல;மாறாகவாழ்க்கைஅர்த்தமுடையது என உணர்த்தும் ஒரு அமைதியான உத்தரவாதம் வழங்கி வாழ்க்கையின் அர்த்தத்தை உணர வைக்க கூடியது ஆகும்.

நற்செய்தியின் மகிழ்ச்சி என்பது இறைவன் நம்மை அன்பு செய்கிறார் என்கிற இறைநம்பிக்கையை நம்மில் உணர வைப்பது ஆகும். இந்த நம்பிக்கையானது அடுத்தவர்களின் மனக்கவலைகளையும், குழப்பங்களையும் மிக எளிதில் நம்மால் உணர்ந்து கொள்ள வைக்கிறது.

- கடவுளையே நாம் முழுதும் சார்ந்துள்ளோம். அதில் தான் நம் மகிழ்ச்சியை கண்டடைய முடியும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசுவுக்கு சான்று பகரும் 15 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு மன்றாட்டு இது “ இறைவா! என்னை உம்மிடமிருந்து பிரிக்கும் எதையும் அகற்றியருளும். உம் அருகில் வர எனக்கு தேவையானவற்றைத் தாரும். இறைவா நான் என்னிடமிருந்து முற்றிலும் விடுபட்டு உம்மில் வந்தடையச் செய்யும்” (புனித நிக்கோலஸ்).

- ஆண்டவரை நோக்கி நாம் ஒன்றாக பாடி செபிக்கும் போது நமது மகிழ்ச்சி வளம் பெறுகிறது. நமது சகோ. ரோஜா கூறியவாறு: “மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் மாறும் வரை கிறிஸ்துவை புகழ்ந்து பாடிக்கொண்டே இரு”. கூடிப்பாடுவது இறைவனோடும், பிற சகோதரர்களோடும் நாம் கொண்டுள்ள உறவை பலப்படுத்தும்.

# இரண்டாம் வழிமுறை

## மிகவும் இன்னலுற்றோரின் அபயக்குரலுக்கு செவி சாய்த்தல்

“ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும்! என் அபயக்குரல் உம்மிடம் வருவதாக! நான் இடுக்கண் உற்ற நாளிலே உமது முகத்தை மறைக்காதீர்!” (திருப்பாடல் 102:1–2)

“அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மை போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்” என்றார் (லூக்கா 10:21).

“அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு. சிறைபட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டிருப்பதாக எண்ணி அவர்களை நினைத்துக் கொள்ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால் துன்புறப்படுபவர்களை மறவாதீர்கள்” (எபிரேயர் 13:2–3)

இன்றைய சமுதாயத்தில், புறந்தள்ளப்பட்டு தனிமையில் வாடும், தீவிரவாதம், பசி, பிணி, நோயினால் பாதிக்கப்பட்ட மற்றும் இயற்கை பேரிடர்களுக்கு ஆளாகி துன்புறும் பலதரப்பட்ட மக்களின் அபயக்குரல்கள் இன்னும் செவிசாய்க்கப்படவில்லை.

அவர்களுக்கு உடனடியாக தங்குமிடம், உணவு, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் மருத்துவ உதவி தேவைப்படுகிறது. எனினும் அவர்களுக்கு தேவையானதில் முதன்மையானது சகோதரத்துவமே ஆகும். பிறரிடம் உதவிகள் கேட்டு பெறுவதை அவமானமாக தோன்றலாம். ஆனால், அதற்கு மாறாக அவர்களிடம் அன்புடன், சகோதர பாசத்துடன், உள்ளார்ந்த நட்புடன் உதவும் போது அவர்களின் மனதை தொடலாம். காயம்பட்டவர்களின் அழுக்குரலை செவிமடுத்து கேட்கும் போதும், அவர்களின் கண்களை உற்று நோக்கும் போதும், பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு செவிமடுக்கும் போதும் முதியவர்கள், சிறைக்கைதிகள், வீடுகளை இழந்தோர், இடம் பெயர்ந்தோர் இவர்களிடம் அன்பு கூர்ந்து தனிமையில் உறவாடி உறவைக்கட்டி எழுப்பினால் மனித மாண்பு உயர்வடையும்.

- இறைமகன் இயேசு கிறிஸ்து நம் மனித குலத்தை ஒன்றிணைத்தார் என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது. நம் ஒவ்வொருவரின் மத்தியிலும் அவர் பிரசன்னமாயிருக்கிறார். அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களிடத்தில், மத்தியில் தான் அவர் பிரசன்னமாகி உள்ளார். (மத்தேயு 25:40ஐ காண்க) வாழ்க்கையில் காயம் பட்டவர்களை நோக்கி நாம் உதவிட

செல்லும் போது நாம் இயேசுவை நோக்கி நெருங்கி செல்கிறோம். ஏழைகளுடன் ஏழைகளாக வாழும் போது இறைவனை நோக்கி இன்னும் முன்னேறிச் செல்லலாம். அடுத்தவர்களின் துன்பங்களில் பங்கேற்க தயங்காதே; துன்பங்களை கண்டு அஞ்சாதே; இவற்றில் முழுமையாக பங்கேற்பதன் மூலம் மனமகிழ்வு பெறுவோம், திறந்த மனதோடு எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் தனிப்பட்ட உறவை மேம்படுத்துவோம். (தேசே விதிகள்).

- நாம் வாழும் பூமியும் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறது. மனிதனுடைய தவறான பயன்பாட்டினால் மேலும், மேலும் காயப்பட்டுக் கொண்டிருக்கிறது. பூமியின் அழுக்குரலுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும். நாம் தனிப்பட்ட அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். பூமி அழிவு பாதையை நோக்கி சென்று கொண்டிருப்பதை தடுக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். நமது வாழ்க்கை முறையிலும் மாற்றம் தேவை.

## மூன்றாம் வழிமுறை

### துன்பங்களையும், மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்தல்

“ மகிழ்வாரோடு மகிழுங்கள்; அழுவாரோடு அழுங்கள்” (உரோமையர் 13:15)

“ துயருறுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்” (மத்தேயு 5:4)

“ எனவே வருந்த வேண்டாம்; ஏனெனில் ஆண்டவரின் மகிழ்வே உங்களது வலிமை” (நெகேமியா 8:10)

இயேசு உயிர்த்தபின், சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டதால் ஏற்பட்ட தழும்புகளுடன் காணப்பட்டார். (யோவான் 20:24–29).

சிலுவையின் துன்பங்களுக்கு பிறகு தான் மீட்பு உண்டு. நம்மை பொறுத்தவரையில், இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுபவர்களுக்கு துன்பங்களும், மகிழ்ச்சியும் சேர்ந்தே வரும். உள்ளார்ந்த மகிழ்ச்சியானது அடுத்தவருடான பரஸ்பர உறவினை பலவீனப்படுத்திவிடக் கூடாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். சில நேரங்களில் எல்லையை தாண்டியும் கூட நாம் துன்பங்களை சந்திக்க நேரிடும். எந்த சூழ்நிலையிலும் விடா முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் நமது வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும்.

சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் உள்ள பலருக்கு நன்கு கல்வி அறிவு பெற்ற, உண்ண, உடுக்க அனைத்து வசதிகளும் நிறைந்திருந்தும் சிலருக்கு மகிழ்ச்சி காணாமல் போவதுண்டு. அவர்கள் உற்சாகம் இழந்து வாழ்க்கையில் ஏதோ இழந்ததை போல

விரக்தி அடைந்து காணப்படுவார்கள். இவர்களைப் பற்றியும் நாம் சிந்தித்து பார்த்து அவர்களுடன் நமது நிறைவான மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

- உலகத்தில் மனிதர்கள் மகிழ்ச்சியாக வாழவே படைக்கப்பட்டார்களே அன்றி துன்பப்படுவதற்காக படைக்கப்படவில்லை. இந்த உண்மையான மகிழ்ச்சி என்பது ஒரு தனிப்பட்ட மனிதருக்கு மட்டும் உரித்தானது அல்ல. அது பிறரோடு பகிர்ந்து கொள்ளப்பட்டு அடுத்த வரும் மகிழ வேண்டும். வானதூதர் அன்னை மரியாளுக்கு தோன்றி இறை செய்தியை உரைத்த பின் மரியாள் தனது உறவினரான எலிசபத்தை சந்தித்து வாழ்த்தி பாடி மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டார்கள் (லூக்கா 1:39–56).

- இயேசுவின் நண்பர் இலாசர் இறந்ததை கேள்வியுற்று இயேசு கண்ணீர் விட்டு அழுதார். அதைப் போலவே மனக்கவலையில் சூழ்ந்துள்ள துன்புறுவோரின் கவலைகளை துணிவுடன் கண்ணோக்கி ஆறுதல் படுத்த நாம் முயல வேண்டும். அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்களுக்காக பணிவிடை புரிதல் முக்கியமானதொன்றாகும்.

- சமுதாயத்தில் வேண்டுமென்றே துன்பங்களுக்கு ஆளாகிறவர்களுக்கு நம் மனதில் இடம் கொடுக்க வேண்டும். அவர்களை கைவிட்டு விடாமல் கடவுளின் கையில் ஒப்படைத்து இறைவனின் கருணையை அவர்கள் மேல் காணும்படி செய்ய வேண்டும்.

## நான்காம் வழிமுறை

### கிறிஸ்தவர்களிடையே, உள்ள அருங்கொடைகளை மகிழ்ச்சியடை

கடவுள் தமது திருவுளத்தின் மறைபொருளை நமக்குத்
தெரியப்படுத்தியுள்ளார். இது கிறிஸ்து வழியாகக் கடவுள் விரும்பிச்
செய்த தீர்மானம். கால நிறைவில் விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை
அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற
திட்டமே அம்மறை பொருள் (எபேசியர் 1:9–10)

“ சகோதரர் ஒன்று பட்டு வாழ்வது எத்துணை நன்று; எத்துணை இனியது”
(திருப்பாடல் 133:1)

கடவுள் இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பி அனைத்து படைப்புகளையும் ஒருங்கிணைத்து அனைத்தையும் ஓரினத்தின்கீழ் உருவாக்க செய்தார். உலகில் ஆண், பெண், பெரியவர், சிறியவர், மற்றும் மொழியாலும், கலாச்சாரத்தாலும், பிரிந்திருந்த அனைத்து மக்களையும் ஒரே குடும்பமாக, இறை மக்களாக அவர்களை வாழ வைப்பதற்காகவே தம் மகனை இம்மண்ணுலகிற்கு கடவுள் அனுப்பி வைத்தார்.

இன்று கிறிஸ்தவர்களில் பலர் பல பிரிவுகளாக பிரிந்துகிடக்கின்றனர். இவ்வாறு பிரிந்துகிடக்கின்ற பல திருச்சபை பிரிவுகளும் ஒன்றிணைவதையே அனைவரும் விரும்புகின்றனர். அவ்வாறான ஒன்றிணைப்பு சமுதாயத்தில் அமைதியை ஏற்படுத்துவதுடன் மற்ற சமூகத்தினரிடையே அது மாபெரும் எடுத்துக்காட்டான அடையாளமாக திகழும்.

- பல்வேறு பிரிவுகளாக உள்ள நாம் கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் அனைவரும் ஒன்றிணைந்து கிறிஸ்துவை நோக்கி திரும்ப வேண்டும். எனவே கிறிஸ்து ஒருவரே நமது மீட்பர் என்று கிறிஸ்துவை வரவேற்கும் வகையில் நம் பிரிந்த சபையினரிடையே மனம் திறந்த உரையாடலை துவக்க வேண்டியது அவசியமாகிறது.‘‘நமது நம்பிக்கையின் அச்சாணி இயேசு கிறிஸ்து ஒருவரே. சட்டங்கள் அதை பிரிக்க கூடாது. நாம் ஒன்றாக கூடி இயேசுவை வரவேற்க வேண்டும். நாம் ஒன்றாக வாழ முற்பட்டு அன்பில் நிலைத்திருக்க வேண்டும்.’’ – (தந்தை . மாட்டா எல் மக்கின், 1919 – 2006)

- இந்த உடனடி புதிய முயற்சிக்காக பெற்ற கொடைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். சுவீடன் நாட்டில் லுந்த் மாநகரில் அதன் 500ஆம் ஆண்டின் மறுமலர்ச்சி நிறைவு விழாவை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சென்ற போது இப்படி மன்றாடினார்.‘‘தூய ஆவியானவர், இந்த மறுமலர்ச்சியின் நிகழ்வு வழியாக நம்மிடையே உள்ள அருங் கொடைகளை உணரச் செய்வாராக’’.

- எனவே நம்மிடையே நிலவும் வேறுபாடுகள், மாற்றுக் கருத்துக்களை தவிர்த்து நம்மை ஒன்றிணைக்க கூடியது எதுவோ அவற்றை வலுப்படுத்திடுவோம். மகிழ்ச்சியை பிறரோடு பகிர்ந்து கொள்வோம்.

# தேசே 2018

## ஆண்டு முழுதும், ஒவ்வொரு வாரமும்

ஞாயிற்றுக்கிழமை துவங்கி மறு ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் அகில உலக இளைஞர்களின் கூட்டத்தில் பல்வேறு பிரச்சனைகளளல் துன்பப்படுவோர்களின் அழுக்குரலுக்கு செவிமடுத்தல், அவர்களை ஆற்றுப்படுத்துதல் மற்றும் இறை அனுபவங்களையும் மகிழ்ச்சியையும் அருகில் உள்ள மற்றும் தூரத்தில் உள்ள மக்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் பிற கிறிஸ்துவ சகோதரர்களுடன் ஒன்றிணைந்து தியானித்தல்.

## இளம் கிறிஸ்துவ மற்றும் இஸ்லாமிய சகோதரர்களுடன் நட்புறவு

ஜுலை 5ஆம் நாள் வியாழக்கிழமை முதல் 8ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முடிய. இரண்டு மதத்தைச் சார்ந்த இளைஞர்கள் சந்தித்து நட்புறவு கொண்டு, இறைவனிடத்தில் கொண்டுள்ள தங்களது உறவினைப் பற்றியும், தங்களின் இறை அனுபவத்தைப் பற்றியும்

ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளுதல் இருவரும் ஒன்றிணைந்து செபித்தல் மற்றும் எதில் ஒன்றிணைந்திருக்கிறோம் எதில் வேறுபட்டிருக்கிறோம் என்பதை தியானித்து கண்டறிந்து அனுபவங்களை பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்.

## 18 முதல் 35 வரையுள்ள வயதினர்கள் கூடி தியானிக்கும் வாரம்

ஆகஸ்டு 19ஆம் நாள் ஞாயிறு முதல் ஆகஸ்டு 26 ஞாயிறு முடிய ஒன்றாக கூடி செபித்தல், நற்செய்தி பகிர்வு, 2018ஆம் ஆண்டில் முதல் வழிமுறையான‘‘மகிழ்ச்சி எனும் ஊற்றுக் கிணற்றை ஆழமாக தோண்டுதல்’’ பற்றி குழுவாக தியானித்தல், வட்ட மேஜை கருத்து பட்டறையில் கலந்துரையாடல் மற்றும் ஐரோப்பிய குழுத் தலைவர்களுடன் உரையாடுதல். இசை நிகழ்ச்சி மற்றும் மகிழ்ச்சி கொண்டாட்டம்.

## ஹாங்காக் 2018

‘‘அகில உலக ஏழாவது இளைஞர்கள் மாநாடு 2018ஆம் ஆண்டு ஆகஸ்டு 8ஆம் நாள் புதன்கிழமை முதல் ஆகஸ்டு 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை முடிய ஆசியாவில் உள்ள ஹாங்காக் நாட்டில் நடைபெற உள்ளது.

ஆசியாவின் பல பகுதிகளிலிருந்து திருப்பயணம் மேற்கொள்ளும் இளைஞர்களை ஒன்றிணைக்கும் நம்பிக்கை பயணமாக இந்த நிகழ்வு அமையும். அந்நகரில் உள்ள பல திருச்சபையினர் இளைஞர்களை வரவேற்பார்கள். இந்த அகில உலக இளைஞர் மாநாட்டிற்கு மற்ற நாட்டு இளைஞர்களையும் உள்ளன்போடு வரவேற்கிறோம்.

## ஐரோப்பிய கூட்டம் 2018–2019

பேசலில், நமது அன்பிற்குரிய சகோதரர் அலோயிஸ் அவர்கள் 41வது ஐரோப்பிய கூட்டம் நடைபெற உள்ள நகரம் மாட்ரிட். இந்த கூட்டமானது 2018ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் தேதி செவ்வாய்க்கிழமை முதல் 2019ஆம் அண்டு சனவரி 1ஆம் தேதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெற உள்ளது.

பல்வேறு கூட்டங்கள் பற்றிய தகவல்களை விரிவாக கீழ்க்கண்ட இணைய தளத்தில் காணலாம்:

**www.taize.fr** @taize